**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**CC.No. 377/2026**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **வினோத்குமார்** | **Caste** | : |
| **Father's Name** | : அன்பழகன் | **Calling** | : மதுவிலக்கு அமலாக்கபிரிவு – தலைமை காவலர் |
| **Village** | : **திண்டுக்கல்** | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 43 |
| | | **Dated** | : **17.08.2026** |

**17.08.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 திரு. **வினோத்குமார்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்**

நான் தற்போது திண்டுக்கல் மதுவிலக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 16.03.2026 ம் தேதி சார்பு ஆய்வாளர் ராம்சேட் அவர்களின் உத்தரவின் பேரில் நான் தலைமை காவலர்கள் சாமிநாதன், ராஜா ஆகியோர் போதைபொருள் குற்றத்தடுப்பு சம்மந்தமாக திண்டுக்கல் ஊரக உட்கோட்டப்பகுதிகளில் ரோந்து செய்து திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்திற்குட்பட்ட அனுமந்தராயன் கோட்டை, மேலபட்டி டாஸ்மாக் அருகே காலை சுமார் 09.00 மணிக்கு வந்தபோது அங்கு வெள்ளைநிற பிளாஸ்டிக் சாக்கு பையுடன் சந்தேகத்திற்கு இடமாக இருந்த ஆஜர் எதிரி சக்கரவர்த்தி எங்களை பார்த்ததும் ஓட முயற்சித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க அவர் பெயர் விலாசம் கூறினார். அவர் வைத்திருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்கு பையை பார்த்தபோது 180 ml அளவுகொண்ட Old Chef Brandy–26 மதுபாட்டில்கள்

இருந்தது. மேற்படி மதுபாட்டில்களை பற்றி அவரிடம் விசாரிக்க அரசு அனுமதி இல்லாமல் அரசு மதுபானக்கடையில் கொஞ்சம் கொஞ்சமாக மதுப்பாட்டில்களை வாங்கி தனது சுயலாபத்திற்காக சில்லறை விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறினார். பின்னர் எதிரியையும் மதுப்பாட்டில்களையும் காலை 09.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்து இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க நான் தனியறிக்கை கொடுத்தேன். சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். காவல் நிலையத்தில் வைத்து எதிரியை கைது செய்து வழக்கு சொத்தை தலைமை காவலர்கள் சாமிநாதன், ராஜா, முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் தனியறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **தனியறிக்கை அதசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இந்த வழக்கில் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் ஏதும் பெறப்படவில்லை என்றால் சரிதான். எதிரி மதுபாட்டில்களை சில்லறை விற்பனைக்காக வைத்திருந்ததாக என்னிடம் சொன்னார் என்று நான் சார்பு ஆய்வாளரின் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி மதுபாட்டில்களை எதில் வைத்திருந்தார் என்று நான் 161 வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவ இடத்திற்கு அருகே நிறைய மக்கள் குடியிருப்புகள் மற்றும் ஜன நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவ தேதியில் மதுபாட்டில்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எனது உயர் அதிகாரிகளின் அழுத்தத்தின் பேரின் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**CC.No. 377/2026**
**Prosecution Witness : 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ராஜா | **Caste** | : |
| **Father's Name** | : காமாட்சி | **Calling** | : மதுவிலக்கு மற்றும் அமலாக்கபிரிவு - தலைமை காவலர் |
| **Village** | : திண்டுக்கல் | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 46 |
| | | **Dated** | : 17.08.2026 |

**17.08.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 3 திரு.**ராஜா** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

நான் தற்போது திண்டுக்கல் மதுவிலக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.03.2026ம் தேதி சார்பு ஆய்வாளர் ராம்சேட் அவர்களின் உத்தரவின் பேரில் நான் தலைமை காவலர்கள் வினோத்குமார், ராஜா ஆகியோர் போதைபொருள் குற்றத்தடுப்பு சம்மந்தமாக திண்டுக்கல் ஊரக உட்கோட்டபகுதிகளில் ரோந்து செய்து திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்திற்குட்பட்ட அனுமந்தராயன் கோட்டை, மேலபட்டி டாஸ்மாக் அருகே காலை சுமார் 09.00 மணிக்கு வந்தபோது அங்கு வெள்ளைநிற பிளாஸ்டிக் சாக்கு பையுடன் சந்தேகத்திற்கு இடமாக இருந்த ஆஜர் எதிரி சக்கரவர்த்தி எங்களை பார்த்ததும் ஓட முயற்சித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க அவர் பெயர் விலாசம் கூறினார். அவர் வைத்திருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்கு பையை பார்த்தபோது 180 ml அளவுகொண்ட Old Chef Brandy–26

Hr. J... HC583

மதுபாட்டில்கள் இருந்தது. மேற்படி மதுபாட்டில்களை பற்றி அவரிடம் விசாரிக்க அரசு அனுமதி இல்லாமல் அரசு மதுபானக்கடையில் கொஞ்சம் கொஞ்சமாக மதுப்பாட்டில்களை வாங்கி தனது சுயலாபத்திற்காக சில்லறை விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறினார். பின்னர் எதிரியையும் மதுப்பாட்டில்களையும் காலை 09.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்து இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க தலைமை காவலர் வினோத்குமார் தனியறிக்கை கொடுத்தார். சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். காவல் நிலையத்தில் வைத்து எதிரியை கைது செய்து வழக்கு சொத்தை என் முன்னிலையிலும், தலைமை காவலர் சாமிநாதன், முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **அத்தாட்சி அதசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமுலம் ஏதும் பெறப்படவில்லை என்றால் சரிதான். எதிரி மதுபாட்டில்களை சில்லறை விற்பனைக்காக வைத்திருந்ததாக என்னிடம் சொன்னார் என்று நான் சார்பு ஆய்வாளரின் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி மதுபாட்டில்களை எதில் வைத்திருந்தார் என்று நான் 161 வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவ இடத்திற்கு அருகே நிறைய மக்கள் குடியிருப்புகள் மற்றும் ஜன நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவ தேதியில் மதுபாட்டில்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எனது உயர் அதிகாரிகளின் அழுத்தத்தின் பேரின் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Jn. John HC583

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

Judicial Magistrate No.I
Dindigul.

# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I
# DINDIGUL.
# CC.No. 377/2026
# Prosecution Witness : 3

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ராம்சேட் | **Caste** | : |
| **Father's Name** | : நடராஜ் | **Calling** | : வத்தலக்குண்டு காவல் நிலையம்- சார்பு ஆய்வாளர் |
| **Village** | : திண்டுக்கல் | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 30 |
| | | **Dated** | : 17.08.2026 |

**17.08.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–4 திரு.ராம்சேட் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்.</u>**

நான் தற்போது திண்டுக்கல் வத்தலக்குண்டு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திண்டுக்கல் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் சார்பு ஆய்வாளராக பணி புரிந்து வந்தேன். கடந்த 16.03.2026 ம் தேதி நான் நிலைய பொறுப்பில் இருந்த போது தலைமை காவலர் வினோத்குமார் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த தனியறிக்கையை பெற்று நிலைய குற்ற எண் 0051/2026 U/s.4(1)(C) TNP Act முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். காவல் நிலையத்தில் வைத்து எதிரியை கைது செய்து எதிரி ஆஜர்படுத்திய மதுப்பாட்டில்களை தலைமை காவலர்கள் சாமிநாதன், ராஜா, ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். சாட்சிகள் வினோத்குமார், சாமிநாதன், ராஜா, ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியையும் தக்க ஜாமீனில் விடுவித்தேன். கைப்பற்றிய மதுப்பாட்டில்களை உயர் அதிகாரிகளின் உத்தரவின்படி கொட்டி அழித்து அழிப்பு சான்று தயார் செய்தேன். பின்னர் இவ்வழக்கில் எனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல்

செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அதசாஆ.3 ஆகவும், அழிப்பு சான்று அதசாஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கின் சம்பவ இடமானது பொதுமக்கள் நடமாட்டம் மற்றும் பொதுமக்கள் குடியிருப்பு அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அசா1 முதல் அசா3 வரை உள்ள சாட்சிகள் அனைவரும் எனக்கு கீழ் பணிபுரியும் காவலர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம், ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மதுபாட்டில்களை சில்லறை விற்பனைக்காக எதிரி வைத்திருப்பதாக என்னிடம் எதிரி சொன்னதாக முதல் தகவல் அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. சம்பவத்தேதியில் எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் வழக்கின் ஆவணங்கள் மற்றும் வழக்கு சொத்துக்கள் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரி மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

Judicial Magistrate No.I
Dindigul.